திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அறிவிப்பின்பேரில் ஒரு சிறு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு ரூல்ஸ் கமிட்டி ஒரு தடவை கூட கூடவே இல்லை. ஆகவே, அந்தக் கமிட்டியை அமைக்கிறபோது ஒரு தடவையாவது அந்தக் குழு கூடவேண்டுமென்று கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சென்ற ஆண்டு அதனுடைய தலைவராக நான் இல்லை.

8. அறிக்கை அளித்தல்.

(அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/73) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை * இப்பேரவை முன் வைக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் 4-வது அறிக்கையை அளித்தல்.

THIRU K. A. WAHAB : As Chairman of the Committee on Government Assurances, I rise to present the Fourth Report (Fifth Assembly) of the Committee.

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

---

* 30—3—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.